# பரத நாட்டியம்
# பாடத்திட்டம்
# தரம் 13

**(2017ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது)**

அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
www.nie.lk

## அறிமுகம்

க..பொ.த சாதாரண தரக் கல்வியை நிறைவு செய்து கொண்டு, உயர் நிலைக் கல்வியைக் கற்கவரும் மாணவர்களுக்குப் பொருத்தமானதாகப் புதிய பரத நாட்டியப் பாடத்திட்டம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய கல்வித் திட்டங்களும் புதிய எண்ணக்கருக்களும் இக்கலைத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உயர் தரத்திலும் இரசித்தல், ஆக்கத்திறன், செய்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு புதிய சாகரத்தின் இரண்டாம் கலைத்திட்டமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

தற்கால உலகில் மாற்றமடையாத ஒன்று மாற்றம் ஆகும். அதற்கமைய கலைத்திட்டத்திலும் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எந்தவொரு கலைத்திட்ட மறுசீரமைப்பும் இரண்டு அம்சங்களில் மாற்றங்களைப் பிரேரிக்கின்றது.

(1) பாடச் சேர்க்கை - பாடக்கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பாடவிடயங்களை இற்றைப்படுத்தல்
(2) பாடவிடயங்களை மாணவரிடம் கொண்டு சேர்ப்பதற்காக முன்வைக்கப்படும் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை

மாணவர் மையக் கல்விக்கு முதலிடம் கொடுக்கின்ற இப்புதிய கலைத்திட்டமானது, மாணவர்களும் ஆசிரியரும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், மாணவர்களின் தேடிக் கற்றலை ஊக்குவிப்பதற்குரிய செயற்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவும், கற்றல் - கற்பித்தல் என்பவற்றை தெளிவாகப் புரிந்து தாமே விருப்பத்தோடு ஈடுபடுவதற்கு ஏற்றவகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல புதிய தேடல்களினூடாகக் கண்டறியப்ப்பட்ட விடயங்களை இப் புதிய கலைத்தித்தினூடாக எதிர்கால சமுதாயத்திற்கு வழங்கிப் புதிய சிந்தனைத் தூண்டலுக்கு வழியமைக்கின்றது..

**தற்காலக் கல்வி முறையின் மூன்று தூண்களாவன:-**

(1) அறிந்துள்ளவற்றைப் பேணிவருதல்.
(2) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விடயங்களைக் கற்றல்.
(3) ஏற்கனவே கற்கப்பட்ட விடயத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பனவாகும்.

இச்செயற்பாடு ஏற்கனவே அறிந்துள்ளவற்றைத் தொடர்ந்தும் மாற்றியமைத்துப் புதுமைப்படுத்தும் புதிய சமூகமொன்றை உருவாக்கும். இதுவரை கண்டறியப்படாதவை தொடர்பாக, இளம் சந்ததியினரை வழிப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். தேடலில் ஈடுபட்டு, ஏற்கனவே அறிந்துள்ளவற்றை மாற்றியமைத்தும், இதுவரை கண்டறியப்படாதவற்றைத் தேடியறிவதற்கும் மாணவர்களைப் பழக்கப்படுத்துவது இப்புதிய கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். அத்துடன் இலங்கையின் ஏனைய சாஸ்திரிய நடன வடிவங்களைக் கற்பதற்கும், அதனூடாகச் சமூகப் புரிந்துணர்தலை ஏற்படுத்தும் நோக்குடனும் சில தேர்ச்சி மட்டங்கள் வடிவமைக்கப்பட்டிள்ளன.

வெற்றிகரமான வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான திறன்கள், ஆற்றல்களை அதாவது ஒன்றிணைந்த ஆளுமைக்கு இன்றியமையாத சிந்தனைத் திறன் (Thinking skill ), சமூகத் திறன் (Social skill ), சுயதிறன் (Personal skill ) ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரிய காலமாகப் பாடசாலைக் காலத்தில் வழங்கப்படத்தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பொதுவான கலைத்திட்டம் இதுவாகும்.

வந்தபின் செயற்படும் அணுகுமுறைக்குப் பதிலாக, வருமுன் செயற்படும் அணுகுமுறையைக் கைக்கொள்வது இன்றைய எதிர்கால சந்ததியினருக்கு அவசியமானதொன்றாகும். எனவே, நாளைய உலகை வெற்றி பெறுவதற்காகத் தேடலை முனைப்பாகக் கொண்ட வகையில், இப்புதிய கலைத்திட்டம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்கால சமூகத்திற்குத் தேவையான ஆளுமையுடைய சமூகத்தை உருவாக்குவது இப்புதிய பாடத்திட்டத்தின் தாரக மந்திரமாகும்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும், சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும், குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும், தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகை கூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப்பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

**சமூகச் சூழல்:** தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

**உயிரியல் சூழல்:** வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதிகச் சூழல்:** இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## பாடத் தேர்ச்சிகள்

- சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக்கொள்வார்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பரதத்தில் கையாளும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வார்.
- கலைத்தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புக்களை மேற்கொள்வார்.
- பரதத்தின் ஊடாகப் பண்பாட்டின்பால் பற்றுறுதியும் மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்திசெய்வார்.
- பரதத்தை வாழ்தொழிலாகக் கொள்வதற்கான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெறுவார்.

# தேசிய இலக்குகளுக்கும் பாடத்திட்ட குறிக்கோளுக்குமிடையிலான தொடர்புகள்

| தேசிய இலக்குகள் | பாடத் தேர்ச்சிகள் |
|---|---|
| 1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும் | ➢ பண்பாட்டின்பால் பற்றுறுதியையும், மரபைக் கையேற்கும் மனப்பாங்கையும் விருத்தி செய்வார்.<br>➢ பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணுவார். |
| 2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும் | ➢ நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாளும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வார். |
| 3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும். | ➢ கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கை வளர்ப்பார்.<br>➢ நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குவார்.<br>➢ குழுவாக இயங்கும் பண்பை விருத்தி செய்வார். |
| 4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல். | ➢ தன்னாற்றலை இனங்கண்டு, கலை நிகழ்வுகளை ஆற்றுகைப்படுத்தும் திறனை விருத்தி செய்வார். |
| 5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல். | ➢ பரதநாட்டியத்துடன் தொடர்பான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கை வளர்த்துக்கொள்வார்.<br>➢ படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.<br>➢ அழகியல் நயப்புடையவராவார்.<br>➢ கலைத்தேடலின் ஊடாகப் புதிய முன்வைப்புகளுக்கு முயற்சிப்பார். |
| 6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல். | ➢ சிறந்த தொடர்பாடற் திறனை விருத்தி செய்வார். |
| 7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்ப்படுத்தவும், விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல். | ➢ வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வார். |
| 8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல். | ➢ சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக்கொள்வார்.<br>➢ தேசிய, பன்னாட்டுக் கலைகளை அறிந்து மதிப்பளிப்பார்.<br>➢ தாமாக முன்வந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் திறனைப் பெறுவார். |

பாடத்திட்டம்

தரம் 13

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 1.0 | இலங்கை இந்திய சாஸ்திரிய நடனங்களை நயப்பார். | 1.1 வெவ்வேறு பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளை நயப்பார். | • வடமோடி<br>• தென்மோடி<br>• காத்தவராயன் கூத்து<br>• காமன் கூத்து<br>• வசந்தன் கூத்து | • யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளையும் மலையகம், மட்டக்களப்பு பிரதேசங்களுக்குரிய கூத்து வகைகளையும் ஒப்பிட்டு மதிப்பிடுவார். | 10 |
| | | 1.2 கிராமியக் கலைகளை நயப்பார். | • ஒயிலாட்டம்<br>• பொம்மலாட்டம்<br>• ஏந்தல் நடனம்<br>• குதிரையாட்டம் | • ஒயிலாட்டம், பொம்மலாட்டம், ஏந்தல் நடனம், குதிரையாட்டம் ஆகியவற்றின் ஆடல் வேறுபாடுகளைக் குறிப்பிடுவார்.<br>• உபகரணங்கள் பயன்படுத்தப்படும் நடனங்களை வேறுபடுத்துவார்.<br>• உடை, ஒப்பனை, இசை என்பவற்றை ஒப்பிடுவார். | 10 |
| | | 1.3 நாட்டிய நாடகங்களை நயப்பார். | • யக்ஷகானம்<br>• பாகவதமேளா<br>• குறவஞ்சி | • யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகியவற்றின் ஆடல் வேறுபாடுகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• ஆடல்களின் கதைக்கருக்களை ஆராய்ந்து முன்வைப்பார்.<br>• ஆடற்கதைகளின் இசை, உடை,ஒப்பனை என்பவற்றின் வேறுபாடுகளைக் கூறுவார். | 10 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 2.0 | ஆக்கத்திறனை வெளிப்படுத்துவார். | 2.1 கோர்வைகள் அமைப்பார் | • ஆதி தாளத்தில் 4 ஆவர்த்தனத்திலும் ரூபகதாளத்தில் 6 ஆவர்த்தனத்திலும் ஜதி வேறுபாடுகளுடனும் கோர்வை அமைத்தல். | • யதிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• அவற்றைப் பெயரிடுவார்.<br>• ஆதி,ரூபக தாளங்களில் குறித்த யதி அமைப்புடன் கோர்வைகள் அமைப்பார்.<br>• அவற்றைக் கொலுப்பிப்பார்.<br>• கோர்வைகளை அபிநயிப்பார். | 10 |
| | | 2.2 இராமாயாணப் பாடலுக்கு அபிநயம் அமைப்பார் | • அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் | • பாடலைப் பாடுவார்.<br>• அபிநயம் அமைத்து ஆடுவார்.<br>• சஞ்சாரி பாவத்தை வெளிப்படுத்துவார். | 04 |
| | | 2.3 ஆடல்களுக்கான ஒப்பனைகளைப் புனைவார். | பரதம், கிராமிய நடனம், நடன நாடகம் ஆகியவற்றுக்கான வேடப்புனைவு செய்தல். | • சாஸ்திரிய, கிராமிய நடனங்களுக்கான ஒப்பனைகளை வேறுபாடுத்திக் காட்டுவார்.<br>• நடன நாடகத்தின் பாத்திரங்களை ஒப்பனையால் வேறுபடுத்துவார்.<br>• முகச்சாயத்திற்குப் பயன்படும் பொருட்களின் பெயர் குறிப்பார். | 10 |

பாடத்திட்டம்
தரம் 13

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 3.0 | நடன உருப்படிகளை ஆடியும் பாடியும் கொலுப்பித்துக் காட்டுவார். | 3.1 பரத நாட்டிய உருப்படிகளை அபிநயித்துக் காட்டுவார். | வர்ணத்தின் உத்தராங்கப் பகுதி<br>• சகியே....அல்லது<br>• சுவாமியை வரச் சொல்லடி...... | • வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை இனங்கண்டு கூறுவார்.<br>• உத்தராங்கப் பகுதியில் இடம்பெறும் உப பகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுவார்.<br>• உத்தராங்கப் பகுதியைப் பாடிக் கொலுப்பிப்பார்.<br>• உத்தராங்கப் பகுதியை அபிநயிப்பார். | 35 |
| | | 3.2 நாயக நாயகி பாவத்தினை வெளிப்படுத்தும் உருப்படியினை அபிநயிப்பார். | வருவேன் வருவேன் என்று. அல்லது. என்னமோ கனமாய் இருக்குதடி .<br>இராகம்- மோகனம் . தாளம்-ஆதி | • பதத்திற்குரிய முத்திரைகளைப் பயன்படுத்தி அபிநயிப்பார்.<br>• உரிய பாவத்துடன் பதத்தினை முன்வைப்பார். | 15 |
| | | 3.3 பல சரணங்களைக் கொண்ட உருப்படியினை அபிநயிப்பார். | ஹரிரிக என்ற அஷ்டபதி<br>இராகம் : பந்துவராளி<br>தாளம் : ஆதி | • அஷ்டபதியினை முகபாவத்துடன் அபிநயிப்பார்.<br>• இதனைப் பாடிக் கொலுப்பிப்பார். | 15 |
| | | 3.4 சிருங்கார ரசத்தை வெளிப்படுத்தும் உருப்படியினை அபிநயிப்பார். | • ஜாவளி<br>மாலை மயங்கும் நேரம்....<br>இராகம் : ஹிந்தோளம்<br>தாளம் : ஆதி | • ஜாவளியினை முகபாவத்துடன் அபிநயிப்பார்.<br>• ஜாவளியினைப் பாடிக்கொலுப்பிப்பார். | 15 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | | **அல்லது**<br>சரிக - கொங்கு<br>இராகம் : சுருட்டி<br>தாளம் : ஆதி | | |
| | | 3..5. விறுவிறுப்பான. உருப்படியை. அபிநயிப்பர் | தில்லானா<br>இராகம் : பிலகரி<br>தாளம் : ஆதி<br>**அல்லது**<br>இராகம் : அமீர்கல்யாணி<br>தாளம் : ரூபகம் | விறுவிறுப்பான. உருப்படியை. அபிநயிப்பர். | 15 |
| | | 3.6 கண்டிய நடனத்தின் அடிப்படை அடவுகளை அபிநயித்துக் காட்டுவார். | • பாஸரம்ப 1-8<br>• கொடஸரம்ப (1-5) | • பாஸரம்ப 1-8, கொடஸரம்ப 1-5 அடவுகளை அபிநயிப்பார். | 20 |
| | | 3.7 நட்டுவாங்கத்தில் அடவுகளைப் பயிற்சி செய்வார். | • நட்டுவாங்கம்<br>• அடவுகள் | • மாணவர்கள் சகல அடவுகளுக்கும் நட்டுவாங்கம் செய்வார். | 25 |
| | | 3.8 பாதபேதங்களை ஆடிக்காட்டுவார். | • பாத பேதங்களும் அவற்றின் பிரிவுகளும் | • பாதபேதங்களைக் கூறுவார்.<br>• பாதபேதங்களின் வகைகளைக் கூறுவார்.<br>• பாதபேதங்களையும் அவற்றின் பிரிவுகளையும் அபிநயிப்பார். | 06 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 4.0 | நடனம் தொடர்பான அடிப்படை அம்சங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார். | 4.1 நடராஜ திருவுருவத்தை விளக்குவார். | • நடராஜ திருவுருவத்தின் தத்துவம் | • நடராஜ திருவுருவத்தின் பகுதிகள் குறிப்பவற்றைப் பட்டியற்படுத்துவார். | 04 |
| | | 4.2 அரங்கம் பற்றி அறிந்து கொள்வார். | • அரங்கம் ஒலி, ஒளி<br>• அரங்கத்தில் விலக்கத்தக்கவை | • நாட்டிய சாஸ்திரம் கூறும் அரங்கம், தற்கால அரங்கம் என்பவற்றின் வேறுபாடுகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• ஒலி,ஒளி என்பன மேடை நிகழ்ச்சிகளுக்கு அளிக்கும் பங்களிப்பினை ஒழுங்கமைப்பார்.<br>• அரங்கத்தில் இடம்பெறக்கூடாதவை பற்றிய விடயங்களைக் கூறுவார். | 06 |
| | | 4.3 பரத எண்ணக்கருக்களைப் விளக்குவார். | • 175 தாளச் சக்கரம்<br>• நாட்டிய நாடகமும் அதன் லக்ஷணமும்<br>• யக்ஷகானம்<br>• பாகவதமேளா<br>• குற்றாலக் குறவஞ்சி<br>• கூத்தனார்<br>• சாக்கியர் | • தாளங்களின் பெருக்கத்தைப் பட்டியற்படுத்துவார்.<br>• நாட்டிய நாடகம் எவ்வாறு அமையவேண்டும் என்பதைக் குறிப்பிடுவார்.<br>• யக்ஷகானம், பாகவதமேளா, குறவஞ்சி ஆகியவற்றின் அமைப்பு முறையினைக் குறிப்பிடுவார்.<br>• கூத்தனார், சாக்கியர் ஆகியோர் பற்றி அறிந்து குறிப்பிடுவார். | 04<br>14 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 4.4 கிராமிய இசைக் கருவிகளை இனங்கண்டு விளக்குவார். | • தப்பு<br>• தாளம்<br>• பறை<br>• சங்கு<br>• மத்தளம்<br>• சேமக்கலம் | • கிராமிய இசைக் கருவிகளை அறிந்து கூறுவார்.<br>• கிராமிய இசைக் கருவிகளின் பயன்பாடு பற்றி அறிந்து கொள்வார். | 04 |
| | | 4.5 பரத நாட்டிய இசைக்கருவிகளை அறிந்துகொள்வார். | • வீணை | • வீணையின் அமைப்பு, அதன் பிரயோகம் பற்றி அறிந்து கூறுவார். | 02 |
| | | 4.6 கல்வி முறைமைகள் பற்றி அறிவார். | • குருகுலக்கல்வி<br>• நிறுவனக் கல்வி | • குருகுலக்கல்வி பற்றி அறிந்து குறிப்பிடுவார்.<br>• நிறுவனக் கல்வி பற்றி அறிந்து குறிப்பிடுவார்.<br>• குருகுலக்கல்வி, நிறுவனக்கல்வி இரண்டினையும் ஒப்பீடு செய்வார். | 04 |
| | | 4.7 பரதநாட்டியத்தை நவீன தொழில்நுட்பத்துடன் இணைப்பார். | • நவீன தொழில்நுட்பம்<br>• அரங்கு<br>• ஒலி<br>• ஒளி<br>• ஒப்பனை<br>• பக்கவாத்தியங்கள் | • அரங்கு, ஒலி, ஒளி, ஒப்பனை, பக்கவாத்தியங்கள், உருப்படிகள் என்பவற்றை நவீன தொழில்நுட்பத்துடன் இணைப்பார்.<br>• புத்தாக்க முயற்சிகளை முன்வைப்பார். | 06 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| 5.0 | சாஸ்திரிய நடனங்களுடன் சம்பந்தப்பட்ட வரலாற்று ரீதியான விடயங்களை உய்த்தறிவார். | 5.1 இலங்கையின் சாஸ்திரிய நடனங்களின் பின்னணியைத் தெரிந்துகொள்வார். | • உடரட்ட நடனம்<br>• பாதரட்ட நடனம்<br>• சபரகமுவ நடனம் | • உடரட்ட நடனம், பஹதரட்ட நடனம், சபரகமுவ நடனம் என்பற்றிற்கு இடையிலான வேறுபாட்டை ஆராய்து குறிப்பிடுவார். | 10 |
| | | 5.2 இலங்கையில், இந்தியாவில் உள்ள கலை வளர்க்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பற்றி ஆய்ந்து அறிவார். | • கலாஷேத்திரா<br>• சங்கீத வித்வசபை (Music Acadamy)<br>• இராமநாதன் நுண்கலைத்துறை<br>• விபுலானந்தா இசை நடனக் கல்லூரி | • முக்கியமான இரு நிறுவனங்களான கலாஷேத்திரா, சங்கீத வித்வசபை கலைகளை வளர்த்தமை, கலைஞர்களை உருவாக்கியமை பற்றிக் குறிப்பிடுவார்.<br>• இராமநாதன் நுண்கலைத்துறை, விபுலானந்தா இசை நடனக்கல்லூரி ஆகியன கலைகளை வளர்க்கும் விதம் பற்றி விபரிப்பார். | 15 |
| | | 5.3 பரதநடன கலைஞர்களின் கலைப் பின்னணியைத் தேடி அறிவார். | • ஏரம்பு சுப்பையா<br>• வீரமணி ஐயர்<br>• தஞ்சை சு.பொன்னையா<br>• கீதாஞ்சலி நல்லையா | • பெரியோர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும் அவர்களின் கலைப்பணிகளையும் அறிந்து பட்டியற்படுத்துவார். | 10 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 5.4 கூத்தின் வரலாற்றுப் பின்னணிகளை ஆராய்ந்து அறிவார். | • மட்டக்களப்புக் கூத்து<br>• மன்னார்கூத்து<br>• மலையகக் கூத்து<br>• யாழ்ப்பாணக் கூத்து | • கூத்துக்கள் தமிழர்களின் மரபு வழியான நாடக வடிவங்கள் என்பதை குறிப்பிடுவார்.<br>• இவை ஆடல், பாடல், உரையாடல் மூலம் கதை சொல்லும் பண்பினைக் கொண்டவை என்பதை கூறுவார்.<br>• இக் கூத்துக்களுக்குத் தனித்துவம் காணப்படுவதை எடுத்தியம்புவார்.<br>• கூத்து கிராம மக்களின் வாழ்வியலோடு இணைந்தது என்பதைக் கூறுவார்.<br>• மட்டக்களப்புக் கூத்து மட்டக்களப்பு மக்களால் ஆடப்படும் என்பதைக் குறிப்பிடுவார்.<br>• மன்னார் கூத்தில் இந்து, கிறிஸ்தவக் கதைகள் இடம்பெறும் என்பதைக் கூறுவார்.<br>• மலையகக்கூத்து மலையக மக்களால் ஆடப்படும் என்பதை அறிந்து குறிப்பிடுவார்.<br>• யாழ்ப்பாணக் கூத்து யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் என்பதைக் கூறுவார். | 15 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|
| | | 5.5 சிங்கள மக்களினதும் தமிழ் மக்களினதும் நடனங்களை இனங்கண்டுகொள்வார். | • பரதம் , கண்டிய நடனங்கள் | • கண்டிய நடனத்தின் வரலாற்றுப் பின்னணியை அறிந்துகொள்வார்.<br>• பரத நடனத்தின் வரலாற்றுப் பின்னணியை அறிந்துகொள்வார்.<br>• இரு நடனங்களினதும் ஆடல் முறைகள் பற்றிக் குறிப்பிடுவார்.<br>• இரு நடனங்களையும் ஒப்பீடு செய்வார். | 06 |